**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

P.W.–1

O.S.No.350/2023

2025ம் ஆண்டு ஜுலை மாதம் 23ம் நாள் வாக்குமூலம் 1969ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி திரு.கே.ஆர். கண்ணன், பி.ஏ., பி.எல்., கூடுதல் சார்பு நீதிபதி, திருப்பூர் அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு. சிவக்குமார் | வயது: 54 |
| த/பெ. : திரு. கணேசன் | முகவரி: |
| தொழில் : | |

**முதல் விசாரணை :**

வாதி ஆஜர். பிரதிவாதி ஆஜர் இல்லை. வாதி பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். தாவாவில் நான் வாதி. முதல் விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். அதை ஏற்றுக் கொண்டு நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை என் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | |
|---|---|---|
| 6.8.2020 – வாதிக்கு பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஒப்பந்த ஆவணம் | அசல் | **வா.சா.ஆ 1** |
| 28.2.2019 – பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய ஆவணம் | அசல் | **வா.சா.ஆ 2** |
| 28.2.2019 – பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய ஆவணம் 1046/2019 | அசல் | **வா.சா.ஆ 3** |
| 30.6.2021 – வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அஞ்சலக ரசீதுடன் | அலுவலக நகல் | **வா.சா.ஆ 4** |
| 5.7.2021 – வழக்கறிஞர் அறிவிப்பு சார்வு ஆகாமல் திருப்பி வந்த கவர் | அசல் | **வா.சா.ஆ 5** |

| | | |
|---|---|---|
| 4.8.2023 – 6.8.2020 முதல் 3.8.2023 வரை உள்ள வில்லங்கச் சான்றிதழ் | அசல் | **வா.சா.ஆ 6** |

ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆகவே எனது தரப்பு சான்று ஆவணங்களை ஏற்று வழக்குப்படி உத்தரவு ஆக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.07.23 18:45:37 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.